பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 20 செவ்வாய்க்கிழமை 04.03.2025 கதிர் 116

## இனி து ரகசியம் அல்ல!

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலுக்கான நாள்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன. இன்னும்இரு வாரங்கள் மட்டுமே இருக்கின்றன. தமிழ்க் கட்சிகளோ இன்னும் ☞2

# திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் சர்வதேச களஞ்சியமாக மாற்றம் பெறும்

## அமைச்சர் அநுர தெரிவிப்பு

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைத்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மறுசீரமைப்பது தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தோம். திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை சர்வதேச எண்ணெய் களஞ்சியமாக மாற்றியமைப்பதற்கு உரியநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம் என வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார். 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழுநிலைவிவாதத்தில்உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய ரீதியில் சக்தி வலுத்துறை காலத்துக்கு காலம் மாற்றமடையும், இதற்கேற்ப புதிய மாற்றுத்திட்டங்களை காலத்துக்கு காலம் அமுல்படுத்தவேண்டும்.

எரிபொருள் பாவனைக்கான கேள்வி தற்போது உயர்வடைந்துள்ள நிலையில் 2025 முதல் -2026 வரையான காலப்பகுதியில் எரிபொருள் பாவனைக்கான கேள்வி குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2050ஆம் ஆண்டுகளில் பெரும்பாலான நாடுகள் ☞9

# பரந்தன், புளியங்குளம் கைத்தொழில் பூங்கா பணிகள் இந்த வருடத்திற்குள் தொடங்கும்

## பிரதி அமைச்சர் தகவல்

பரந்தன் மற்றும் புளியங்குளம் ஆகிய இடங்களில் கைத்தொழில் பூங்காக்களை அமைப்பதற்கான உட்கட்டமைப்புப் பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று கைத்தொழில் மற்றும்தொழில்முனைவோர்மேம்பாட்டுப் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார். ☞8

### கடலில் கிடந்த

# பரா லைட் வெடித்து இளைஞர் படுகாயம்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதி திருநீற்றுக்கேணி கடற்கரைப் பகுதியில் பரா லைட் வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மதிந்து வந்த பொருளை கரைக்கு எடுத்து வந்து விளையாடியதில் அது வெடித்தது என்றும் வெடித்த பொருள் இரவு நேரத்தில் வெளிச்சத்தை ஏற்படுத்-துவதற்காகப் படையினரால் பயன்படுத்தப்படும் 'பரா லைட்' என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநீற்றுக்கேணி கடற்கரையில் நேற்று மாலை நீராடச் சென்ற நான்கு இளைஞர்களே கடலில் ☞8

# எரிபொருள் நெருக்கடி ஒரு முடிவுக்கு வந்தது

கடந்த சில நாள்களாக எரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட நெருக்கடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் நேற்று பிற்பகல் முதல் எரிபொருளைப் பெறுவதற்கான கொள்முதல் கட்டளைகளை வழங்கத் தொடங்கியுள்ளனர்.

நுகர்வோர் இன்று முதல் வழக்கம் போல் எரிபொருளைப் பெறமுடியும் என்று பெட்ரோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தனாயக்க தெரிவித்தார். நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு எந்தவித பற்றாக்குறையும் இல்லாமல் எரிபொருள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இதுவரை வழங்கி வந்த 3 சதவீத தள்ளுபடியை புதிய சூத்திரத்தின் மூலம் மாற்றியமைக்க இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தது. ☞8

# 33 சதவீத மின் கட்டணக் குறைப்பு எப்போது?

## எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி



தேர்தல்வாக்குறுதியான33சதவீத மின்சார கட்டணத்தை எப்போது குறைக்கப்போகிறது என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆடப்போகிறதா என்பதை தெரிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் நேற்றக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

# ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கு உயர் பதவி வழங்க எதிர்ப்பு

## அது மக்களிடம் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்கிறது சட்டத்தரணிகளின் கூட்டிணைவு

ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு சட்டத்தரணிகளின் கூ-ட்டிணைவு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. நீதிபதிகள்பதவியிலிருந்தகாலப்பகுதியில் வழங்கிய தீர்ப்புக்களின் நேர்மைத்தன்மையை சந்தேகத்துக்கு உட்படுத்துவதுடன், நீதித்துறையின் சுயாதீனத்தன்மைத்தன்மைமீதுமக்கள்கொண்டிருக்கும் நம்பிக்கையில்சரிவைஏற்படுத்தும்எனவும்கூட்டிணைவு கரிசனை வெளியிட்டுள்ளது.

இது குறித்து சட்டத்தரணிகள் கூட்டிணைவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஓய்வுபெற்ற நீதிபதிகளை, அதிலும் குறிப்பாக ☞9

# மின்சார சபை மாபியாக்களுக்கு அடிபணிந்ததா ஆளும்தரப்பு?

## சபையில் மரிக்கார் எம்.பி. கேள்வி




மின்சார சபை மாபியாக்களுக்கு ஆளும்தரப்பு அடிபணிந்து விட்டதா என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான ☞2

### கிழக்கு மாகாணத்தை

# உங்களால் நிர்வகிக்க முடியாவிட்டால் பொறுப்பை எம்மிடம் ஒப்படையுங்கள்

## ஆளும்தரப்புக்கு சாணக்கியன் எம்.பி. சவால்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் கிழக்கு மாகாணத்தை நிர்வகிக்க முடியாவிட்டால் அந்தப் பொறுப்பை எம்மிடம் தாருங்கள் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவுசெலவுத்திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில்உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞8

# முறையிடலாம்

பாடசாலை மாணவர்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை 'சீசன் டிக்கெட்'டுகளை வைத்திருக்கும் குடிமக்களைத் தவிர்க்கும் பேருந்து சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்க 1958 என்ற எண்ணை அழைக்குமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறார்.

இதுபோன்றதவறானசெயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கத்தயங்கமாட்டேன் என்றும், இது குறித்து இலங்கை போக்குவரத்து சபை சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு ஏற்கனவேதகவல்தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். ☞2

# மன்னார் காற்றாலைத் திட்டத்தின் 2ஆம் கட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு

## நாடாளுமன்றில் சத்தியலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைதிட்டத்தின்இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியுள்ளது. இத்திட்டத்துக்கு அப்பிரதேச மக்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் நேற்று ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தமது கூட்டணிகள் குறித்தே தெளிவான முடிவில் இல்லை. நண்பன் யார், விரோதி யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. கள நிலையைப் புரிந்துகொள்வதிலும் அதனை எதிர்கொள்வதிலும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மந்தபுத்தியுடனேயே இருக்கிறார்கள். அவர்களால் இன்றைய அரசியல் களத்தில் புத்தாக்க சிந்தனையை ஏற்படுத்த முடியவில்லை.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் நாள் அறிவிக்கப்படும் வரையில் எந்தத் தமிழ்க் கட்சியும் தேர்தலுக்குத் தயாராக இருக்கவில்லை என்பது நிச்சயம். கட்சிகளின் இந்த மெத்தனம், மந்தப் போக்கு காரணமாக மக்களிடமும் தேர்தல் குறித்த ஆர்வமோ விருப்பமோ காணப்படவில்லை. அவர்களும் அதனை 'லெஃப்ட்' கான்டில் கையாளும் நிலைமையே இருக்கிறது. இது எந்தளவில் என்றால், வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு கட்சிகள் இன்னும் அகழ்வாய்வுகளை நடத்த வேண்டிய அளவிற்குப் பரிதாபமாக உள்ளது.

இருப்பதில் ஓரளவிற்கேனும் கட்சிக் கட்டமைப்பையும் ஒழுங்கையும் கொண்ட கட்சி. கிராமங்கள் வரையில் கிளைகளைக் கொண்டுள்ள கட்சி. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேயே தனித்துப் போட்டியிடுவது என்ற தீர்க்கமான முடிவோடு இருந்த கட்சி. அதனால் அந்தக் கட்சியிடம் உள்ளூராட்சி சபைக்கான வேட்பாளர் பட்டியல் ஏற்கனவே உண்டு. அதில் யாராவது இறந்து போயிருந்தால், அல்லது வெளிநாடு சென்றிருந்தால் அதுமல்லாமல் வேறு கட்சிகளுக்குத் தாவியிருந்தால் அதனால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவேண்டியதுதான் இப்போது அந்தக் கட்சிக்கு உள்ள பணி. ஏற்கனவே போட்ட பட்டியலில் இருப்பவர்களை அப்படியே உள்வாங்குவது என்பது அதன் மத்திய செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு என்பதால், வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அந்தக் கட்சி பகிரங்கமாக அறிவித்தது.

சோதனை என்னவென்றால், கட்சி எதிர்பார்த்தளவிற்கு மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. மிகக் குறைந்தளவு விண்ணப்பங்களே கிடைத்துள்ளன அல்லது சில இடங்களுக்குக் கிடைக்கவே இல்லை என்பதுதான் நிலை. வடக்கு கிழக்கிலேயே மிகப் பெரிய தமிழ்க் கட்சி, இலங்கை நாடாளுமன்றத்திலேயே மூன்றாவது பெரிய கட்சி, அதிகளவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரே கட்சிக்கே இந்த நிலை என்றால் மற்றைய கட்சிகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் செயற்பட்டதைப் போன்றே இப்போதும் யாருடன் கூட்டணியில் இருக்கிறது, இல்லை என்று தெரியாமலேயே திணறிக் கொண்டிருக்கிறது. ஒரு கலந்துரையாடலுக்கு அழைத்துவிட்டு அவசரமாக 9 கட்சிக் கூட்டு என்று அறிவித்தார்கள். அன்றிரவே ஒரு கட்சி (தமிழ்த்தேசிய பசுமை இயக்கம்) நான் கூட்டில் இல்லை என்று அறிவித்துவிட்டது. தமிழ் மக்கள் கூட்டணியும் அந்தக் கூட்டில் தான் இல்லை என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது. ஆக, 9 கட்சிக் கூட்டு அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள்ளேயே அது 7 கட்சிகளாகக் குறைந்துவிட்டது. போதாததற்கு ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சியும் இந்தக் கூடட்டில் இருப்பதற்கு விருப்பப்படவில்லை. எனினும் அதன் உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்படவில்லை. அதன் தலைவர்களில் ஒருவரான சரவணபவன் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் நாடு திரும்பியதும் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடக் காத்திருக்கிறார். அதற்கிடையில், ஒட்டுக்குழுக்களை (சந்திரகுமாரின் கட்சி) தம்மோடு சேர்த்துக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டோடு தாம் இணையப் போவதில்லை தனித்தே பயணிக்கப்போகிறோம் என்று சரவணபவன் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருக்கிறார். ஆக இந்தக் கூட்டு இப்போது 6 கட்சிகளாகிவிட்டது.

அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த 5 கட்சிகளுடன் ஈபிடிபியிலிருந்து விலகிய சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் சேர்ந்த 6 கட்சிக் கூட்டணிதான் மிஞ்சியிருக்கிது. அதாவது தடியெடுத்து (ஆயுதங்கள் தூக்கி) தண்டல்காரர்களானவர்களின் கூட்டுத்தான் எஞ்சியிருக்கிறது. ஜனநாயகப் பாரம்பரியம் கொண்டவர்களோ, ஜனநாயக அரசியல் கட்சிகளோ இப்போது இந்தக் கூட்டுக்குள் இல்லை. மக்களுக்காக ஆயுதங்கள் ஏந்திப் போராடுகின்றோம் என்று கூறிப் புறப்பட்டு, வன்முறைவழியில் பயணித்து, தமிழீழத்தை அடைந்தே தீருவோம் என்று சத்தியப் பிரமாணம் எல்லாம் எடுத்துவிட்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தோடு இதையெல்லாம் கைவிட்டுப் பொதுமன்னிப்புப் பெற்றவர்களும் 2009இல் அரச படையினரிடம் சரணடைந்து அவர்களிடம் மறுவாழ்வு பெற்றவர்களும் இணைந்த கூட்டு.

ஒருவேளை இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியும் இந்தக் கூட்டும் எதிர் எதிர் தரப்புக்களாக இருந்தால், தமிழீழத்தை ஜனநாயக வழியில் கேட்டுப் பின் கைவிட்டவர்களுக்கும் அதனை பெற்றுத் தருகின்றோம் என்று ஆயுதங்களைத் தூக்கித் திரிந்து பின்னர் கைவிட்டு ஓடியவர்களுக்கும் இடையிலான தெளிவான போட்டியாக இருக்கும். மக்கள் யாரை ஆதரிக்கிறார்கள் என்பதை இதன் மூலம் ஓரளவிற்குக் கணிக்கக்கூடியதாக இருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தப் போட்டிக்கான இடத்தை தமிழ் அரசுக் கட்சி வழங்குமோ என்பதுதான், இந்தத் தேர்தலில் அது தனது 'ய' டீமாக மற்றைய கூட்டணியை ஆக்கிக்கொண்டால் என்ன என்று சிந்திக்கிறது. உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் முறைமை காரணமாக இந்த 6 கட்சிக் கூட்டணியை தனது 'ய' டீம்தான் என்று முன்கூட்டியே மக்களுக்கு அறிவித்துவிட்டு, தேர்தலின் பின்னர் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கலாமோ என்று அது யோசிக்கிறது. தந்தை செல்வா சொன்னதைப் போல "கடவுள்தான் (இருந்தால்) காப்பாற்ற வேண்டும்" அந்தக் கட்சியை.

..........................

9 கட்சிக் கூட்டில் இருந்து தமது கட்சி வெளியேறுவது குறித்து தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் ஓர் அறிக்கைவிடுத்துள்ளார். அதில், "ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அழைத்ததன் பேரில் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது பற்றி எமது கட்சியால் ஆராயப்பட்டது. முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவும் கூட்டாகத் தேர்தலில் போட்டியிட்ட போது சில மாவட்டங்களில் யானைச் சின்னத்திலும் (ஐ.தே.கட்சியின் தேர்தல் சின்னம்) வேறு சில மாவட்டங்களில் தாமரை மொட்டு சின்னத்திலும் (ஸ்ரீ.பொ.பெ யின் தேர்தல் சின்னம்) இன்னும் சிலவற்றில் பொது சின்னமொன்றிலும் போட்டியிட முடிவெடுத்தன.

அதுபோல் எமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்காமல் ஒரு போட்டி தவிர்க்கும் ஏற்பாட்டினை எட்ட முடியுமா என்று ஆராயப்பட்டது. எனினும் அவ்வாறான ஏற்பாட்டுக்கு இடம் இல்லை என்று தெரியவந்தது. தமிழ்த் தேசிய நலனின் அடிப்படையிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அட்சர கணித முறையின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து மான் சின்னத்திலேயே போட்டியிடும் என்ற முடிவுக்கு வந்திருப்பதை மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்துப் போட்டியிடும் அவருடைய இந்த முடிவில் தேசிய நலன் எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. ஆனால், தேர்தல் அட்சர கணித முறைப்படி யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றில் தம்மால் சில இடங்களைத் தன்னும் கைப்பற்ற முடியும் என்று மணிவண்ணன் தரப்புக் கருதுவதால் தேர்தலின் பின்னர் அதனை வைத்துப் பேரம் பேச முடியும் என்று கருதியே இந்த முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆக மொத்தத்தில் சுத்த கட்சி அரசியல் நலன் கருதிய தமது இந்த முடிவிற்கு தமிழ்த் தேசிய நலன் என்ற முலாத்தை பூசி மக்களை ஏமாற்றுவதை இவர்கள் எப்போதுதான் நிறுத்தப் போகிறார்களோ தெரியவில்லை.

................................

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் கட்சிகளுக்கு எழுதிய கடிதம் தொடர்பில் புளொட் தலைவர் சித்தார்த்தன் பதில் அனுப்பியிருக்கிறார். சிவஞானம் அனுப்பிய கடிதம் தமக்குக் கிடைக்கவில்லை கிடைத்ததும் பதில் தருவார் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார். இப்போது சித்தர் பதிலளித்திருக்கும் நிலையில் சுரேஸுக்கும் அந்தக் கடிதம் கிடைத்திருக்கும் என்றும் அவரும் விரைவில் பதிலளிப்பார் என்றும் நம்புவோம்.

சித்தர் அனுப்பிய பதிலில், "எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கான உங்கள் விருப்பத்தை தெரியப்படுத்தி நீங்கள் அனுப்பி வைத்த கடிதம் கிடைக்கப்பெற்றேன். இன நலன் குறித்து எங்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒற்றுமை பற்றி கடிதத்தில் நீங்கள் தெரிவித்துள்ள விடயங்களில் எக் காலத்திலும் நாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்லர்.

உள்ளூராட்சித் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பை அடுத்தே ஏற்பட்டது. தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக்கருவை. தங்களது மத்திய குழு மட்டக்களப்பில் கூடி எடுத்திர்கள் இதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது. பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசுக் கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்தபோதும் கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவினை ஏற்று செயற்படுமாறு எம்மை அறிவுறித்தினார்.

அன்று கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்றவரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாக செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பாக பயணிக்க தொடங்கினோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துவக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளினால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை கடந்த நாடளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்துகொண்டோம். மேலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியியாக போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்க தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பலனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்றை உருவாக்க முடிந்துள்ளது.

நீங்கள் விரும்புவதுபோல, தமிழரசுக் கட்சியுடன் இக்கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ் தேசியத்திற்கு மேலும் வலுச்சேர்க்கவேண்டும் என்பதில் நாமும் பெரு விருப்பம் கொண்டுள்ளோம். எனவே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடாத்தக் கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத் தரமுடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுள்ளது.

சித்தார்த்தன் கேட்பது போல தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பேசிய பின்னர்தான் இந்தக் கூட்டுக்கான முயற்சியிலேயே சிவஞானம் இறங்கினார். இது குறித்து மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லையேதவிர, மத்திய குழுவில் இந்த விவகாரம் பேசப்பட்டே மற்றைய தலைவர்களுடன் இது பற்றி ஆராய்வது என்ற முயற்சியை சிவஞானம் தொடங்கினார். பாவம் அவர், தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து பயணிக்க, தமிழர் நலன் கருதி ஒற்றுமையாக இருக்க மற்றைய கட்சிகள் விரும்புகின்றன என்று அப்பாவித்தனமாக நம்பினார். தன்னுடைய தலைமைக் காலத்தில் அதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்றும் மனதார விரும்பினார். மற்றவர்களின் ஒற்றுமைக் கோசம் என்பதே தமிழ் அரசின் முதுகில் சவாரி செய்தபடி அதனை இழுத்து வீழ்த்தி, அழித்தொழிக்கும் கயமையின் வடிவம்தான் என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. மற்றைய தலைவர்கள் அவரை இந்தத் தள்ளாத வயதிலும் குனிய வைத்து முதுகில் நன்குகுத்தியதற்குப் பின்னர் உணர்ந்திருப்பார் என்று நம்புவோம். அதனால் இனியும் மத்திய செயற்குழுவிற்கு இந்த விவகாரத்தை எடுத்துச் சென்று தீர்மானம் போடுவதையெல்லாம் அவர் செய்யவார் என்று எதிர்பார்க்கமுடியாது.

.இடிமின்னல்
(idiminnal@gmail.com)

# யாழ்ப்பாணக் கடலில் 17 பேர் திடீர்க் கைது

## சட்டவிரேதமாக கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில்

வடக்குக் கடலில் சட்டவிரோதமான முறையில் கடல் அட்டை பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடற்படையினரால் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 4255 கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாணம், கல்முனை மற்றும் வினயாசோதி கடற்பகுதியில் மார்ச் முதல் நாள் இரவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் கூறுகின்றனர்.

கடலில் சுழியோடி கடலட்டை பொறுக்கிய இவர்களை நான்கு டிங்கி படகுகள் தாம் பிடித்தனர் என்றும் இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர வலயத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையிலும் சட்டப்பூர்வ மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும் இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், மணியத்தோட்டம், உதயபுரம், குருநகர், மற்றும் அரியாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். 21 முதல் 56 வயதுக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களால் பயன்படுத்தப்பட்ட சுழியோடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் மேற்கொள்வர்.

## 33 சதவீத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும்தரப்பு ஜனாதிபதி தேர்தல் போதும் நாடாளுமன்றத் தேர்தல்போதும் எரிபொருள் விலையை பெருமளவில் குறைக்க முடியும் என தெரிவித்து வந்தனர். அதனை எவ்வாறு குறைக்க முடியும் என்பதையும் தெரிவித்தார்கள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் 34 ஊடகவியலாளர்கள் படுகொலை

## சுட்டிக்காட்டிய சாணக்கியன் விசாரணைக்கும் வலியுறுத்தல்

ராஜபக்ஷர்களின் ஆட்சியில் 34 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் ஊடகவிலாளர்கள். கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் உண்மைகளை மூடி மறைப்பதற்கு ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு சாதகமான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று அரசாங்கம் பலமுறை குறிப்பிடுகிறது. ஆனால் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக தொடர்ந்து வரிசையில் உள்ளார்கள். அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளதை இது வெளிப்படுத்துகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கத்திடமும், ஜனாதிபதியிடமும் பலமுறை கேள்வியெழுப்பினேன். ஆனால் இதுவரை அதற்கு உறுதியான பதில் கிடைக்கவில்லை.

இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை (2009), திருகோணமலை ஐந்து மாணவர் படுகொலை (2006), 11 தமிழ் மாணவர்கள் கடத்தல் - படுகொலை , கீத் நொயார் படுகொலை , லசந்த விக்கிரமதுங்க படுகொலை (2009), பிரகீத் ஹெக்னலிகொட ( 2010) உள்ளிட்டவை பிரதானவையாக கருதப்படுகின்றன.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் கடந்த மாதுமளவில் பரவலாக பேசப்பட்டது. சந்தேக நபர்களை விடுவிப்பதாக சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தில் ஏதேனுமொரு மர்மம் உள்ளது. ஏனைய படுகொலைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

உதலகம ஆணைக்குழுவின் அறிக்கையில் திருகோணமலை ஐந்து மாணவர் படுகொலை தொடர்பில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு பலபரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை அமைத்தார். இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் 11 மாணவர்கள் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவராக பெயர் குறிப்பிட்ட வசந்த கரண்ணாகொடவுக்கு எதிராக வழக்கு விசாரணைகளை முன்னெடுக்காமலிருக்க பரிந்துரைக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், தாஜுதீன், பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட பலரின் வழக்கு விசாரணைகள் கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்டன. இதற்கு அரசியல் காரணிகள் செல்வாக்கு செலுத்தின.

இலங்கை தமிழ்ச்சங்கம் 2004 முதல் 2009 ஆம் ஆண்டு முதல் படுகொலை செய்யப்பட்ட 34 தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

ஐயாதுரை நடேசன், கந்தசுவாமி பாலனந்தராஜா, லங்கா ஜயசுந்தர, தர்மரட்னம் சிவராம், கண்ணமுத்து அரசகுமார், செல்வராஜா, செல்வரட்ணம், கிருஸ்ணபிள்ளை, பலீல், நவரட்ணம், சுகிர்தராஜன், கனநாதன், ஜோஜ், , சயதாஸ், ரஞ்சித் குமார், லக்மால் டி சில்வா, மனோஜன் ராஜ், விஸ்வநாத், பாஸ்கரன், விமலராஜன், ரவிசந்திரன் பாலச்சந்திரன், சந்திரபோஸ் சுதாகர், செல்வராஜா ரவிவர்மன், நிலக்சன், சிதில்ராஜன், நிமலராஜன், சுபாஜினி, லிம்பியோ, தர்மலிங்கம், தேவகுமார், ரஸ்மி மொஹமட், லந்த விக்கிரமதுங்க, புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி மற்றும் சசிமதன் ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பானாலோர் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள். கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டன. மக்கள் சிறந்த ஆணையை வழங்கியுள்ளார்கள். அதனை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். புதிய யாப்புருவாக்கம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்காமல் ஜனாதிபதி தப்பித்துச் சென்றார். ஆகவே இந்த கேள்விகளுக்கேனும் ஜனாதிபதி பதிலளிக்க வேண்டும். - என்றார்.

# சம்மாந்துறையில் வீடு உடைத்து 13 லட்சம் ரூபா பணம் திருட்டு

## சந்தேகநபர் கைது

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீட்டினை உடைத்து 13 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாடுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் குறித்த பகுதியில் காணப்படும் வீடு மற்றும் வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கேமராவை சோதனை செய்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது சனிக்கிழமை மலையடிக்கிராமம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட பணத்தின் ஒரு தொகையையும், திருட்டுச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், வீடு உடைப்பதற்கு பயன்படுத்த உபகரணங்கள் என்பன சம்மாந்துறை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ். நகரில் ஞாயிறன்று விக்டர் ஐவனுக்கு அஞ்சலி




இலங்கையின் ஊடக வரலாற்றில் புலனாய்வு செய்தியிடல் ஊடக பரப்பில் கோலோச்சி மறைந்த, ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் பங்களிப்புடன் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த அஞ்சலி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இடதுசாரி கொள்கையை கொண்ட, 1949 முதல் 2025 வரையான அவரது வாழ்க்கை வரலாற்றில் சுமார் 35 வருட காலமாக இலங்கையின் இதழியல் துறையில் மட்டுமின்றி நாட்டின் அரசியல் சமூகத்திலும் தனக்கென்று ஓர் இடத்தை வகுத்து துணிச்சலுடன் செயற்பட்டு வந்த விக்டர் ஐவன் கடந்த ஜனவரி 19 ஆம் திகதியன்று காலமானார்.

இந்நிலையில், ஊடகத்துறையினர் மட்டுமல்லாது அரசியல் மற்றும் பொது அமைப்புகள் என அவரை நினைவுகூர்ந்து அஞ்சலித்துள்ளனர்.

'புலனாய்வு செய்திக்கென தத்துரூபமான பொறிமுறையை வகுத்து செய்தியிடலை முன்னெடுத்து வந்த விக்டர் ஐவன் வடக்கின் தகவல்களையும் அச்சமின்றி துல்லியமாக அறிக்கையிட்டவர்' அமையத்தின் தலைவர் செல்வக்குமார் தெரிவித்தார். தமிழர் தேசத்தில் நடத்தப்பட்ட சம்பவங்களையும் துயரங்களையும் அச்சமின்றி வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்களுக்கு உந்துதலாகவும் இருந்தார் எனவும் சுட்டிக்காட்டினார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாதிக்கப்பட்ட குழந்தைகள் மீது போதியளவு அக்கறை அவசியம்

உலகின்பலபகுதிகளிலும்குடும்பங்கள், சமூகங்கள்மற்றும்சூழ்நிலைகள் உங்களை ஏமாற்றும்போது, சிலர் மட்டுமே அதிகம் பாதிக்கப்பட்டு வாழ்க்கை முழுவதும் மாற்றப்படுகிறார்கள் குழந்தைகள் மற்றும் முதியவர்கள். ஆளும்தரப்பின் தயவிலும், மோசமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் பெரும்பாலும் முன்னுரிமையாக கண்காணிப்புக்குட்படுத்தப்படாத பல்வேறு நிறுவனங்களின் தயவிலும் வாழும் இலங்கைக் குழந்தைகளும் இதற்கு வேறுபட்டதல்ல. ‘எந்தவொரு சமூகத்தின் உண்மையான அளவுகோலையும் அது அதன் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களை எவ்வாறு நடத்துகிறது என்பதில் காணலாம்‘ என்றார் மகாத்மா காந்தி.

வட மத்திய மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் துறையின் முன்னாள் ஆணையர் மற்றும் ஒரு மூத்த நன்னடத்தை அதிகாரி ஒருவரும் அரச சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் இருந்த குழந்தை ஒன்றைக் கொடுமைப்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்டிருப்பது இலங்கை இப்படிப்பட்ட விழிம்பு நிலைக் குழந்தைகளை எப்படிக் கையாள்கின்றது என்பதற்கான உதாரணம்.

கைது செய்யப்பட்டவர்கள் 49 வயதான வாரியபொலவைச் சேர்ந்த சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தைச் சேர்ந்த முன்னாள் ஆணையர் மற்றும் 57 வயதான அனுராதபுரத்தைச் சேர்ந்த மூத்த நன்னடத்தை அதிகாரி ஆகியோராவர். இந்த இரு சந்தேகநபர்களும் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு 2021 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் உள்ள ஓர் அனாதை இல்லத்தில் குழந்தைகள் கொடுமைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பானது, இது தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் அனுராதபுரம் காவல்துறையில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் பேரில் ஒரு ஆலோசனை மையத்தில் வைக்கப்பட்ட 17 வயதுச் சிறுமியை ஓர் சமையல்காரராக வேலை செய்ய வைத்ததற்காகக் காவல்துறையினர் சட்டமா அதிபரிடம் (புறா) ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நீண்ட காலம் எடுத்த பின்னர் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குழந்தை புறக்கணிப்பு, குழந்தைக்குத்தீங்கு விளைவித்தல், குழந்தைக் கொடுமை மற்றும் அவளை சமையல்காரராகப் பணியமர்த்தியமை ஆகிய குற்றங்களுக்காக சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியிருந்தார். அரவ குழந்தை பாதுகாப்பு இளந்திரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை இந்தச் சம்பவம் உணர்த்துகின்றது. ஏற்கனவே இது தொடர்பில் பல தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றன. தற்போதைய சம்பவம் அதனை விரைவுபடுத்தவேண்டிய அவசியத்தை உரக்கச் சொல்லியுள்ளது.

இலங்கையில் பல ஆண்டுகளாக குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் என்பன பெரும் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. இதனால்பாதிக்கப்படுவோரின்எண்ணிக்கைஒவ்வொருஆண்டும்தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அறிக்கைகளின்படி, 2021 ஆம் ஆண்டில் சுமார் 11,000 குழந்தை துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டில் பதிவான 8,000 வழக்குகளைவிட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும். 2022 ஆம் ஆண்டில், பதிவான வழக்குகளின் எண்ணிக்கை 10,497 ஆகும். இருப்பினும், சமூக களங்கம், கலாச்சார மற்றும் மத நம்பிக்கைகள் மற்றும் பழிவாங்கும் பயம் காரணமாக பல வழக்குகள் பதிவு செய்யப்படாமல் இருப்பதால், உண்மையான புள்ளிவிவரம் இதைவிட அதிகமாக இருக்கும் என்று அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

பெண் குழந்தைகள் பெரும்பாலும் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள், பதிவான வழக்குகளில் 60% க்கும் அதிகமானவை பெண் குழந்தைகள் சம்பந்தப்பட்டவை. இவர்களில் அதிகம் பாதிக்கப்படுவது 11 முதல் 15 வயதுக்குட்பட்டவர்களே. இதுபோன்ற துஷ்பிரயோக போக்குகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க ஏதாவது செய்ய வேண்டும்.

யுனிசெஃப் போன்ற ஐ.நா. நிறுவனங்களின் அவதானிப்புப்படி, குழந்தைகளுக்கு எதிரான உணர்ச்சி, உடல் மற்றும் பாலியல் வன்முறையை பொறுத்துக்கொள்ளும் சமூக மற்றும் கலாசார விதிமுறைகள் இலங்கை முழுவதும் உள்ளன. மீறல் ஏற்பட்டாலும்கூட, குழந்தை பாதுகாப்பு சேவைகளை எவ்வாறு அணுகுவது மற்றும் பயன்படுத்துவது என்பது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளில் பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் ஒருங்கிணைப்பு இல்லாததால், சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் நீதி போன்ற பிற இணைக்கப்பட்ட துறைகளின் பணிகளில் முக்கியமான குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகளை பின்னுவது கடினமாகிவிட்டது. எனவே, இலங்கை தற்போதைய குழந்தைப் பாதுகாப்பு முறைமை மற்றும் தேசிய குழந்தைப் பாதுகாப்பு கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வது மிகவும் அவசியம்.

## ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை கணித, விஞ்ஞானப் போட்டிகளில் முதலிடம்

(கேதீஸ்)

ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் பழைய மாணவர்களால் ஹற்றன் பொஸ்கோ கல்லூரியில் நடத்தப்பட்ட நுவரெலியா மாவட்டத்தின் பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான போட்டியில் முதலாம் இடத்தை தலவாக்கலை தமிழ் மகா வித்தியால (தேசிய பாடசாலை) மாணவர்கள் பெற்றனர்.



இம்மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களான சாள்ஸ், நவீன், எம்.ஜி. சர்மா, அமுதப்பிரியா, லாவண்யா ஆகியோருக்கும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பாடசாலையின் அதிபர் ரோஹினி, பிரதி அதிபர்கள், உப அதிபர் ஜெகதீசன் உட்பட ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் வாழ்த்துகின்றனர்.

## ஆலயம் உண்டியல் உடைத்து யாழ். வடமராட்சியில் திருட்டு

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலயத்தில் காணிக்கை உண்டியல் சனிக்கிழமை திருடப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக சென்றிருந்த மக்கள் குறித்த காணிக்கை உண்டியல் ஆலயத்தில் இல்லாததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக பங்குத்தந்தை மற்றும் ஆலய அருட்பணிச் சபையினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1,600 போதை மாத்திரைகளுடன் சுதுமலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் 1,600 போதை மாத்திரைகளுடன் இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் இருவரை, பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வழிமறித்து சோதனையிட்ட போது, 1,600 போதை மாத்திரைகளை கைப்பற்றினர்.

அதனை அடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரையும் பொலிஸார் கைது செய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## குறிஞ்சிப்பிட்டியில் விபத்து ஒருவர் சிறுகாயம் அடைவு


(சியாஜ்)

கற்பிட்டி பாலாவி பிரதான வீதியில் குறிஞ்சிப்பிட்டி சந்தியில் ஞாயிற்றுக்கிழமை பகல் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் சிறு காயங்களுடன் கற்பிட்டி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லொறியும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றதுடன்

மோட்டார் சைக்கிளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் செலுத்தியவர் சிறு காயங்களுடன் கற்பிட்டி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்ற உப முதற்கோலாசானாக வன்னி எம்.பி. ஜெகதீஸ்வரன் நியமனம்

இலங்கையில் முதன் முதலாக நாடாளுமன்ற ஆளும் கட்சியின் உப முதற்கோலாசானாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகம் இலங்கைப் நாடாளுமன்ற அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள விசேட ஒருங்கிணைப்பு அலுவலகம் ஒன்றாகும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அரசாங்கப் பணிகளுக்கு முக்கியத்துவமளித்து அரசாங்கக் கட்சியின் அனைத்துப் பணிகளையும் திட்டமிடல், ஒழுங்குசெய்தல் மற்றும் அப்பணிகளை மேற்கொள்வதை ஒருங்கிணைப்புச் செய்தல், வழிநடத்துதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் என்பன இந்த அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் போது நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் ஏனைய அனைத்துத் திணைக்களங்கள் என்பவற்றுடன் பரஸ்பர நட்புடன் உள்ளகப் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

அவ்வாறே, அரசாங்கக் கட்சியின் அனைத்துப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றிய விழிப்பூட்டல், குழுக் கூட்டங்களுக்கு அழைத்தல், எதிர்வரும் காலங்களுக்குரிய நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நாடாளுமன்ற அமர்வுகள் உள்ளிட்ட ஏனைய விசேட சந்தர்ப்பங்களின் போதும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்தல் என்பன அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் அலுவலகத்தின் பிரதான பொறுப்பாகும்.

ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை கவனத்திற்கொள்ளும் போது அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் அலுவலகம் என்பது, நாடாளுமன்றத்தின் உள்ளே மிகவும் முக்கியத்துவமிக்க பணிகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாக அமைந்துள்ளதுடன், அதன் போது அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக




உள்ளமையால் பிரதி முதற்கோலாசான்கள் இருவர் மற்றும் உதவி முதற்கோலாசான்கள் மூவர் உதவிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ம.ஜெகதீஸ்வரன் உப முதற்கோலாசானாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் வைத்திய கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள் இந்த நியமனத்தை வழங்கி வைத்துள்ளார். இலங்கை வரலாற்றில் தமிழர் ஒருவர் இப் பதவியை பெறுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

100

# வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக ஜெயதிலக பதவியேற்பு

ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தற்போது நாடு பூராகவும் பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல பதவி நிலைகளை வகித்து வந்த சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க, வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செற்படும்



வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாககடமைகளைப்பொறுப்பேற்றுக் கொண்டார். 100



# கணவனை தேடி வலைவிரிப்பு மனைவியின் முறைப்பாட்டால்

உல்லாசமாக இருந்த தம்பதிகள் இடையே கருத்து முரண்பாடு காரணமாக தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் ஒன்று கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப்பள்ளி வாசல் அருகில் உள்ள கடற்கரைப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மனைவி, கணவன் மீது முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார்.

குறித்தமுறைப்பாட்டிற்கமையபெண்கள் சிறுவர்முறைப்பாட்டுபிரிவுபொலிஸ்குழுவினர் தேடுதல் மேற்கொண்டு தலைமறைவாகியுள்ள குடும்பஸ்தரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும் குறித்த சம்பவத்தில் சுமார் 38 வயதுடைய நிந்தவூர் பகுதியை சேர்ந்த பெண் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைகல்முனைபிராந்தியஉதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் வழிகாட்டுதலில் சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கண்டக்குழி முஸ்லிம் மகா வித்திக்கு ஒலி பெருக்கி சாதனங்கள் வழங்கல்

(சியாஜ்)



கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2002 ஆம் ஆண்டு சாதாரண தர வகுப்பு பழைய மாணவர்களால் பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்கள் பாடசாலையின் அதிபர் எம்.பீ.எம் ஜஸீமிடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்

எம் என் எம். அஸ்மிர் உதவி அதிபர் எம். ஜுனைத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் மற்றும் ஏனைய சகல பழைய மாணவர்களையும் ஒன்றிணைத்து முன்னேற்ற பாதையில் பாடசாலையை கொண்டு செல்வதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அதன் முதற்கட்டமாகவே பாடசாலையின் முக்கிய தேவையாக காணப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்கள் தொகுதி ஒன்றை வழங்கி சகல பழைய மாணவர்களுக்குமான ஒரு முன்மாதிரி செயற்பாட்டை நிறைவேற்றியுள்ள 2002 சாதாரண தர பழைய மாணவர்களுக்கு பாடசாலையின் நிர்வாகம் சார்பாக தமத நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் எம்.பீஎம் ஜஸீம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மூதூர் தள வைத்தியசாலையில் குறைகளை நிவர்த்திக்க உறுதி

(ஜிப்ரான்)

மூதூர் தள வைத்தியசாலையில் நிலவும் பௌதிகவள மற்றும் ஆளணி சம்பந்தமான குறைகளை கண்டறிவதற்காக உயர் மட்ட வைத்திய ஆலோசனை குழுவினர் ஞாயிறு பிற்பகல் மூன்று மணிக்கு மூதூர் தள வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர்.

மூதூர் தள வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினரின் அழைப்பினை ஏற்று இக்குழுவினர் வருகை தந்திருந்தனர்.

மூதூர் தள வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை பார்வையிட்டு, அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் ஏற்பாடுகளை செய்வதற்காக இக்குழுவினர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அழைப்பினை ஏற்று வருகைதந்த வைத்தியர் லால் பண்ணப்பிட்டிய?

துணை இயக்குநர் - ஜெனரல் மருத்துவசேவை வைத்தியர் வி.பிரேமானந்த் பிராந்திய சுகாதார சேவை இயக்குநர் மற்றும் வைத்தியர் இலங்காதரன் எஎச்எஸ். கிழக்கு மாகாணம், மூதூர் தள வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஷஹிர் முலாஃபர், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் வைத்தியசாலை வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது வருகை தந்த குழுவினர் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்துள்ளனர்.









# அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமாவிற்கும் உதுமாலெப்பை எம்.பிக்குமிடையில் சந்திப்பு

(ஹமீட்)

அட்டாளைச்சேனை அல் இபாதா கலாசார மன்றத்தின் போசகரும் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.உதுமாலெப்பை அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களை அண்மையில் சந்தித்து அட்டாளைச்சேனை அல் இபாதா கலாசார மன்றத்தின் 13 வருட கால சேவைகளையும் அதன் மகோன்னத பணிகளையும் விளக்கியதுடன் மன்றத்தின் சேவைகளை உள்ளடக்கிய ஆவணப் புத்தகத்தையும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலாவின் தலைவர் எம்.ஐ.எம்.ரிஸ்வி(முப்தி) அவர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கி வைத்தார்.





# மருதம் கலைக்கூடல் மன்றத்தின் 11 ஆவது ஆண்டு விழா நிகழ்வு

(ஸாகிர்)

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் 11 ஆவது ஆண்டு விழா சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் சாய்ந்தமருது பொலிவேரியின் கிராமத்தில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் 'மர்ஹூம் கலைச்சுடர் சக்காப் மௌலானா ஞாபகார்த்த அரங்காக' வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.



பாரம்பரியக்கலையான கலாபூஷணம் அபூபக்கர் இஸ்ஸதீன் தலைமையிலான மருதூர் கலைமன்ற பொல்லடிக் குழுவினரால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டு அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

மன்றத்தின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹீர், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றிம்ஸான், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான மௌலவி ஏ. தௌபீக், ஏ.எச்.சபீகா, ஓய்வுநிலை கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், சாய்ந்தமருது - மாளிகைக்காடு முன்னாள் நம்பிக்கையாளர் சபை உறுப்பினரும் முன்னாள் மரைக்காயருமான ஏ.எம். றசீது, அமானா நற்பணிமன்றத்தின் தலைவர் ஏ.எல்.ஏ. பரீட், மருதமுனை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். அன்சார், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி. றிப்கா அன்ஸார், பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள், எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் கலை, இலக்கிய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்ற தோடு, பல்துறைக் கலைஞரும் மன்றத்தின் உபதலைவருமான எஸ்.எம். அலிக்கான், கலையுலகில் ஆற்றிவரும் அயராத சேவைக்காக, அவரது குடும்பத்தினர் புடைசூழ 'மருதூர் அலிக்கான்' எனும் சிறப்புப் பட்டத்துடன் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் இம்மன்றத்தை உருவாக்கி, இலைமறை காயாக உள்ள பலதரப்பட்ட கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து, பிரதேசத்தில் கலையை அழிய விடாது, இன்றும் ஆற்றிவரும் பணிக்காக, மன்றத்தின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானா அவரது மனைவி சகிதம் சபையோர் மற்றும் அதிதிகளால் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் கௌரவிப்புக்களும் மற்றும் மன்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்வை ஆசிரியரும் ஒலிபரப்பாளருமான ஏ.எல். நயீம் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.





காலைக்கதிர் Kalaikkathir

## 33 சதவீத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருளுக்கு 50 ரூபா வரி அறவிடுவதற்கு மேலதிகமாக இன்னும் பெருமளவில் வரி அறவிடப்படுகிறது. நூற்றுக்கும் அதிகமான வரி இருக்கிறது. எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் கடனை திறைசேரிக்கு எடுத்துக்கொண்டோம். தற்போது எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்குக் கடன் இல்லை. ஆனால் தற்போது ஒவ்வொரு லீட்டருக்கும் 50 ரூபா வரி அறவிடப்படுகிறது என அன்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், அனைத்து வரிகளையும் இரத்துச் செய்துநுகர்வோருக்குநியாயமானமுறையில் எரிபொருளை விநியோகிப்பதாகவும் தெரிவிக்கிறார்.

ஜனாதிபதி அன்று மக்களுக்கு தெரிவித்த வாக்குறுதியை ஏன் ஆளும்தரப்பால் செய்ய முடியாது எனக் கேட்கிறோம். அதேபோன்று 9 ஆயிரம் ரூபாவுக்குரிய மின் கட்டணத்தை 6 ஆயிரம் ரூபாவாகவும் 3 ஆயிரம் ரூபா மின்கட்டணத்தை 2 ஆயிரம் ரூபாவாகவும் அனைவருக்கும் நூற்றுக்கு 33 சதவீதம் மின் கட்டணக் குறைப்பைச் செய்வோம் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் ஆளும்தரப்பு நூற்றுக்கு 20 சதவீதம் மின்சார கட்டணக் குறைப்பைத்தான் மேற்கொண்டிருக்கிறது. அதுவும் மக்கள் போராடியதாலேயே கிடைத்தது. எஞ்சிய 13 சதவீதமின்சாரக்கட்டணகுறைப்பைஎப்போது ஆளும்தரப்பு மேற்கொள்ளப்போகிறது என அமைச்சரிடம் கேட்கிறேன்.

அண்மையில்நாட்டில்திடீர்மின்துண்டிப்பு ஏற்பட்டதற்கு குரங்கு பாய்ந்ததால் ஏற்பட்டது என சிலர் தெரிவித்து வந்தார்கள். அது எதனால் ஏற்பட்டது என எங்களுக்கு தெரியாது. என்றாலும் குரங்கு ஒன்றின் காரணமாக முழு நாட்டினதும் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாகவே சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. இவ்வாறு செய்தி வெளியிடும்போது நேரடி முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்களா? சர்வதேச முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்களா?

அதனால் நாட்டில் இவ்வாறான சம்பவம் ஒன்று ஏற்பட்டால் அது தொடர்பில் பதிலளிக்க விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கடமைப்பட்டிருக்கிறார். அதனை செய்யத் தவறியதன்மூலம்மின்சாரபாவனையாளர்கள், தொழிற்சாலைகள் அசௌகரிய நிலைக்கு ஆளாகுவதுமாத்திரமல்லாதுநாடுஎதிர்பாக்கும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படுகிறது.

2028இல் கடன் மீள செலுத்துவதற்கு எங்களுக்கு பொருளாதார அபிவிருத்தி இலக்கொன்று இருக்கிறது. அதேபோன்று அரச வருமான இலக்கொன்றும் இருக்கிறது. இந்த இரண்டு இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் நாடு பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும். அதனால்எரிபொருளுக்குவிதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்கி நுகர்வோருக்கு அதன் நன்மையை ஆளும்தரப்பு எப்போது மேற்கொள்ளப்போகிறது? அதேபோன்று மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு பங்கு எப்போது குறைக்கப்போகிறது? அத்துடன் மின்சார கட்டண விலை சூத்திரத்தை ஆளும்தரப்பு பின்பற்றுகிறதா? அல்லது புதிய சூத்திரம் ஏதாவது இருப்பின் அதனைத் தெரிவிக்க முடியுமா? அவ்வாறு இல்லாவிட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு பாடிக்கொண்டிருக்கிறதா என கேட்கிறேன் - என்றார்.

## எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் தமக்குக் கிடைக்கும் இலாபம் குறைவதாகச் சுட்டிக்காட்டிய எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கினர். தேவையான எரிபொருளைப்பெறுவதற்கானகட்டளைகளை வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தினர்.

தமதுபுதியசூத்திரத்தின்மூ-லம்எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு முன்னையதைவிடஅதிகஇலாபமேகிடைக்கும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறுகின்றது. ஆனால் உரிமையாளர்கள் அதனை ஏற்க மறுக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் ஆளும்தரப்பு ஒரு தீர்வை முன்வைக்கும் என்ற எதிர்பார்ப்போடு தமது போராட்டத்தை இடைநிறுத்துகின்றனர் என்று சந்தனாயக்க தெரிவித்தார். புதிய சூத்திரத்தின் மூலம் ஒரு மாத காலத்திற்கு எரிபொருள்நிரப்புநிலையங்களைஇயக்குவது என்றும் அதன் பின்னர் இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து விவாதிக்க கனிம வளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தனக்கு வாய்ப்பளித்ததால், அதில் கவனம் செலுத்தி மீண்டும் எரிபொருள் கட்டளைகளை வங்க முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார். மற்ற நிறுவனங்களின் கீழ் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாவிட்டால், 'சிபெட்கோ' எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கலந்துரையாடலில் பங்கேற்று ஒரு தீர்வை எட்டுவார்கள் என்று தான் நம்புகிறார் எனவும் அவர் கூறினார்.

தற்போதைய ஆளும்தரப்பின் அனுபவமின்மைகாரணமாகவேஇதுபோன்ற முடிவு எடுக்கப்பட்டதாக தான் நம்புகிறார் எனவும் சந்தனாயக்க கூறினார்.

இந்தவிவகாரம்குறித்துஆராயுமாறுகோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதால், அவர் இந்த விஷயத்தில் கவனம்செலுத்துவார் என்றுதான் நம்புகிறார் எனவும், தற்போதைய ஆளும்தரப்பை அமைப்பதற்கு முன்பு எழுந்த ஒரு பிரச்சினை காரணமாக ஆளும்தரப்புக்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்படவேண்டும்என்றுதான்நம்புகிறார் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் எரிபொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களான, சினோபெக் மற்றும் ஆர்.எம்.பார்க் ஆகியன பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுக்கு 'கமிஷனாக' 3 சதவீத தள்ளுபடியை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளன என்று பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தனது 3 சதவீத கட்டணத்தைக் குறைக்கத் தயாராகி வரும் நேரத்தில், 3 சதவீத தள்ளுபடிக்கு ஒப்புக்கொண்டதற்காக இரு நிறுவனங்களையும் பாராட்ட வேண்டும் என்று பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## பரந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகாண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பத்து புதிய கைத்தொழில் பூங்காக்களை தொடங்குவதற்காகஅவற்றின்உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று தெரிவித்த அவர், இங்கிரிய, ரைகம, மில்லனிய (இரண்டாம் கட்டம்), பரந்தன், வலச்சேன, புளியங்குளம், அரச்சகட்டுவ, திஹகொட, மாவதகம, எலயபட்டுவ மற்றும் பிங்கிரிய ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த கைத்தொழில்பூங்காக்கள்நிர்மாணிக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

ஒவ்வொரு துறைக்கும் தொழில்துறை பூங்காக்களைஒதுக்குவதுநம்பிக்கைக்குரியது என்றும், இது அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும் என்றும் துணை அமைச்சர் கூறினார், மேலும் இந்த திட்டம் எதிர்காலத்தில் நாட்டிற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறினார்.

## பரா லைட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடந்த 'பரா லைட்'டை என்ன பொருள் என்றே தெரியாது கரைக்கு எடுத்து வந்து விளையாடியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் 25 வயதானவர் என்றும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் விசாரணைகளை மேற்கொண்டுள்ள காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

## உங்களால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு செலவுத் திட்டத்தில் மீள் புதுப்பிக்கத்தக்கவலுசக்திக்கும்உட்கட்டமைப்பு நவீனமயப்படுத்தலுக்கும்இந்தவரவுசெலவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுப்பிக்கதக்க வலுசக்தியில் வடக்கு, கிழக்கில் காற்றாலை திட்டம் மிகவும் பாதுகாப்பான மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய முறையாக உள்ளது. காற்றாலைகளால்உற்பத்திசெலவுகுறைகிறது மற்றும் அதனால் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு குறைவாகும்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் காற்றாலை திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகின்றது. இதில் மக்களுக்கு சந்தேகம் இருப்பதால் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த நிறுவனத்தின் செயற்பாடு மக்கள்எதிர்ப்புக்குக்காரணமாகஇருக்கின்றது.

இது விடயத்தில் ஆளும்தரப்பு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படாமையினாலும் சில தனியார் நிறுவனங்களைதிருப்திப்படுத்தக்கூடியவாறு செயற்பட்டமையினாலும் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். முதல் கட்ட காற்றாலைத் திட்டத்தால் மன்னார் தீவிற்குள் மழை வெள்ளம் வழிந்தோட முடியாது பல நாள்களாகத் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள மக்கள் இந்தத் திட்டத்தில் கவனிக்கப்படவில்லைஎன்றகுற்றச்சாட்டுகளும் உள்ளன. வேலை வாய்ப்புகளை அந்தச் சமூகத்தினருக்கு வழங்காமையும் ஒரு பிரச்சினைக்குரியதாக உள்ளது.

இதேவேளை சூரிய சக்தி மின்சாரம் தொடர்பிலும்பிரச்சினைகள் உள்ளன. மக்கள் இந்தத் திட்டத்தில் ஆவலாக இருக்கின்றனர். ஆனால் இந்த திட்டத்தை தமது வீட்டுக் கூரையில் பொருத்த மக்கள் தீர்மானித்தாலும் மின்சார சபை அதன் கொள்ளவு போதாது எனக்கூறி அனுமதி மறுக்கின்றனர்.

அத்துடன் பொதுவான பிரச்சினைகள் பல உள்ளன. அதாவது குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் மின் இணைப்பை பெற்றுக்கொள்ள 40 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள். விசேட தேவையுடைய குடும்பங்களுக்கு இலவசமின்இணைப்பைவழங்கவேண்டும். குறைந்த மின் கட்டணம் அல்லது மானிய முறையில் மின்கட்டணத்தை குடிசைக் கைத்தொழிலாளர்கள், சிறுஉற்பத்தியாளர்கள், சிறு விலங்கு பண்ணையாளர்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

அதேபோன்றுவிவசாயம்மற்றும்மின்பிடி நடவடிக்கைகளுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டதை போன்று மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

குறிப்பாக மீளக் குடியேறிய மக்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் செய்யும் விவசாயம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு குறைந்த விலையில் மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்க நிதி ஒதுக்கப்பட வேண்டும் - என்றார்.

## பொலிஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய மின்சக்தி திட்டத்திற்கு காணி ஒதுக்கும்போது மிகவும் கவனமாக அந்தந்த கிராமங்களில் உள்ள நிலத்தின் அளவைப் பார்த்து அவற்றை வழங்கவேண்டும்.

வவுணதீவு ஈச்சந்தீவு பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அங்கு நிலமே இல்லை. இதனால் சூரிய மின்சக்திக்காக காணிகளை ஒதுக்கும்போது அந்த பிரதேசத்தின் நலன்களைப் பாதுகாப்பது அந்தப் பிரதேச அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

மாவட்ட அபிவிருத்தி குழுவில் கடந்த டிசெம்பர் மாதத்தில் எடுத்த எந்தத் தீர்மானமும் இதுவரையில் நடைமுறைக்கு வரவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படக்கூடாது என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்தபோதும் மண் அகழ்வு இன்றும் தொடர்கிறது.

அதேபோன்று மீன்பிடி பிரச்சினை தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. எமது மாவட்ட மக்கள் தமது பிரச்சினைகளுக்காக வீதிக்கு வருவதற்கு இடமளிக்கக்கூடாது. ஆரையம்பதியில் பெரும் போராட்டமொன்று நடைபெறுகிறது. வாள்வெட்டு குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் வரவு செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது ஜனாதிபதி பதிலளித்து உரையாற்றுகையில் பாதாள உலக கும்பலின் செயற்பாடுகள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தில் நடக்கலாம் என்று குறிப்பிட்டார். இந்நிலையில் ஆரையம்பதியில் வாள்வெட்டுகுழுக்களின்செயற்பாட்டால்மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துகின்றனர்.

அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் கிழக்கு மாகாணத்தை நிர்வாகம் செய்ய முடியாவிட்டால் எமது மூத்த அரசியல்வாதிகள் இருக்கின்றனர். ஹிஸ்புல்லா இருக்கின்றார். நான் மூத்த அரசியல்வாதியாக இல்லாவிட்டாலும் 15 வருடங்களாக அரசியலில் ஈடுபடுகின்றேன். உங்களால் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலத்தை பார்க்க முடியாவிட்டால் எங்களிடமாவது தாருங்கள். இந்த மாவட்டத்தில் பிரச்சினைகள் வீதிக்கு வரும்வரையில் வேடிக்கை பார்த்துக்கொண்டு எங்களால் இருக்க முடியாது என்றார்.

## முறையிடலாம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக்குழுஅமைச்சர்பிமல்ரத்நாயக்க தலைமையில்நாடாளுமன்றத்தில்கூடியபோது இது தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு செலவுத் திட்டத்தின் வலுச் சக்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்பிறப்பாக்கியில் குரங்கு தாவியதால் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது என்று மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் இதுவரையில் உண்மையான காரணம் வெளியிடவில்லை. ஆகவே இனி குரங்கு கதையை குறிப்பிடும்போது ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சிக்கு வந்தவுடன் எரிபொருள் மீதான வரியைக் குறைப்பதாகவும், அதனைத் தொடர்ந்து எரிபொருள் மற்றும் மின்கட்டணத்தை குறைப்பதாகவும் ஆளும் தரப்பு தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது. ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள் நிறைவடைந்துவிட்டது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினீர்களா, இல்லை.

ஆசியாவில்குறைந்தமின்கட்டணம்உள்ள நாடாக இலங்கையை மாற்றியமைப்பதாக குறிப்பிட்டீர்கள். செய்தீர்களா, இல்லை ஆசியாவில் அதிக மின்கட்டணம் உள்ள நாடாக இலங்கை காணப்படுகிறது. 254 சதவீதமாக மின்கட்டணம் காணப்படுகிறது.

தேர்தலுக்கு முன்னர் 75 ஆண்டுகால அரசியலை விமர்சித்தீர்கள். மக்களைத் தவறாக வழிநடத்த பல வாக்குறுதிகளை வழங்கினீர்கள். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் வழமை போல் 75 ஆண்டுகால அரசியலை விமர்சித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

மின்கட்டமைப்பில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. ஏதுமில்லை. இலங்கை மின்சார பொறியியலாளர் சங்கம் பிரதான மின்மாபியா என்று குறிப்பிடப்பட்டது.

கடந்த நாடாளுமன்றத்தில் கோப் குழுவுக்கு மின்சார சபை அழைக்கப்பட்ட போது மின்சார சபையின் பல விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டன. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் கோப் குழுவில் இருந்தார். அவரும் எதிர்ப்பு தெரிவித்தார். இன்று மின்மாபியாக்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆளும்தரப்பு மின்மாபியாக்களுக்க அடிபணிந்து விட்டதா?

வீட்டிலுள்ள பெண்களை இலக்காகக் கொண்டே தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் பொய்யுரைத்தது. அநுர ஆட்சிக்கு வந்தால் மின்கட்டணம் குறையும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறையும் என்று வீட்டுப் பெண்கள் நம்பி வாக்களித்தார்கள். இதுவரையான காலப்பகுதியில் அடிப்படை பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு வழங்கியுள்ளீர்கள்.

தேர்தல் காலத்தில் முதல்தர பொய்யை குறிப்பிட்டு முதல் தரத்துக்கு வந்தீர்கள். மக்களைத் தவறாக வழிநடத்தினீர்கள். இதன் கர்ம வினை நிச்சயம் கிடைக்கும் என்பதை மறந்து விடாதீர்கள் - என்றார்.

## ஓய்வுபெற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவிவகித்து ஓய்வுபெற்றவர்களை தற்போது அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவிகளுக்கு நியமிப்பதானது, சட்டத்துறை சார்ந்தோர் உள்ளடங்கலாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களினதும் தீவிர கரிசனையை ஈர்த்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதிகளின் இத்தகைய நியமனங்கள், அவர்கள் பதவியிலிருந்த காலப்பகுதியில் வழங்கிய தீர்ப்புக்களின் நேர்மைத்தன்மையை சந்தேகத்துக்கு உட்படுத்துவதுடன், நீதித்துறையின் சுயாதீனத் தன்மை மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையில் சரிவை ஏற்படுத்தும். குறிப்பாக நீதிபதிகள் ஓய்வுபெற்றவுடன் இடம்பெறக்கூடிய இவ்வாறான நியமனங்களின் விளைவுகள் மேலும் மோசமானவையாக இருக்கும்.

இருப்பினும் இதன் அர்த்தம் நீதிபதிகளின் அறிவும், அனுபவமும் அவர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் வீணாகவேண்டும் என்பதல்ல. ஆனால் அவர்கள் நீதிபதியாகப் பதவிவகித்த காலப்பகுதியில் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டிருக்கக்கூடுமே? என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்காத வகையில் அவர்களது அறிவும், அனுபவமும் நாட்டின் நலனுக்காக உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ளப்படவேண்டும்.

அதேவேளை ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரசமைப்புப்பேரவையின் ஊடாக, உரிய செயன்முறையைப் பின்பற்றி சட்ட ஆணைக்குழு உள்ளிட்ட கட்டமைப்புக்களின் தவிசாளர்களாகவோ, விசாரணை ஆணைக்குழுக்களின் தலைவர்களாகவோ நியமிக்கப்படுவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அதுமாத்திரமன்றி சட்டக்கல்வி மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகளுக்கான பயிற்சி வழங்கல் என்பவற்றுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்தமுடியும்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட நன்மைகள், சேவைக்காலத்தில் அவர்கள் பெற்ற நன்மைகளுக்கு சமனானதாக அமையவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

அவர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் அரசமைப்பின் ஊடாக அனுமதியளிக்கப்பட்டவை தவிர்ந்த நிதி அல்லது ஏனைய நலன்களைப் பெற்றுத்தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது - என்றுள்ளது.

## திருகோணமலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் பாவனையில் இருந்து விடுப்பட்டு இயற்கைக்கு பாதிப்பற்ற வழிமுறைகள் மூலமான சக்தியீட்டலுக்குச் செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருசில நாடுகள் கனிய எண்ணெய் ஆய்வுகளை மேற்கொள்ளபோவதில்லை என்ற தீர்மானத்தைக் கொள்கை ரீதியில் எடுத்துள்ளன. ஆகவே உலக நாடுகள் மாற்றுச் சக்தி வலுத்துறை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன.

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் காற்றாலை முறைமையுடனான புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்துக்கு அதிக சாத்தியம் காணப்படுகிறது. சூரிய மின்சக்தி உருவாக்கத்துக்கான அதிக சாத்தியமும் காணப்படுகிறது. அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சக்தி வலுத்துறையில் உலக நாடுகள் மாற்று வழிமுறைகளுக்குச் சென்றாலும், ஆசிய நாடுகள் மாற்றுத்திட்டங்களுக்கு செல்வதற்கு அதிக காலம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு ஆசிய நாடுகளின் பொருளாதார நிலைமை ஏதுவான காரணியாக அமைகிறது. இலங்கையின் மூலோபாய அமைப்பிடம் இதுவரை காலமும் முறையாக பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை.

இலங்கையை சக்தி வலுத்துறையின் கேந்திர மையமாக மாற்றியமைப்பது என்பது பிரதான இலக்காகும். முதல் அங்கமாக சீன முதலீட்டுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மானிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதியை பிரதான இலக்காக கொண்டு இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. சபுகஸ்கந்த மின்னுற்பத்தி நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் அதிக கொள்வனவுடனான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை தவிர்த்து நாட்டின் வலுசக்தி தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது. திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைத்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மறுசீரமைப்பது தொடர்பில் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை சர்வதேச எண்ணெய் களஞ்சியமாக மாற்றியமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம்.

திருகோணமலை துறைமுகத்தின் அமைப்பிடத்தை கருத்திற் கொண்டு அப்பகுதியை இயற்கை எரிவாயு உற்பத்தி மையமாக மாற்றியமைப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எரிவாயு நிலத்தடி குழாய்களை புனரமைப்பதற்கான பணிகளை இன்னும் மூன்று மாதங்களில் மேற்கொள்வோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஆரோக்கிய மேம்பாட்டு அறிமுகம்



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான ஆரோக்கிய மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் முன்பள்ளிகளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்தல் தொடர்பான அறிமுக நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

இதன் போது முன்பள்ளிப் பாடசாலைகளை சுகாதார மேம்பாடுடைய பாடசாலைகளாக மாற்றுவது சம்பந்தமாகவும், அனைத்து முன்பள்ளி பாடசாலைகளையும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்வதன் நன்மைகள் மற்றும் அவசியம் பற்றியும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் அவர்களால் தெளிவூட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சுகாதார கல்வி அதிகாரி எம்.ஜே.பைறூஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக உளவள ஆலோசகர், முன் பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக தாதிய சகோதரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் பாடசாலை பற் சிகிச்சையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



# ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட 10 பேருக்கு பிணை கிடைத்தது



(கிஷாந்தன்)

கடந்த வருடம் ஐந்தாம் மாதம் 30 ஆம் திகதி களனிவெளி பெருந்தோட்ட யாக்கத்திற்கு உட்பட்ட பீட்ரூ தோட்ட தொழிற்சாலையில் அத்துமீறி நுழைந்ததாக குற்றச்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று (திங்கட்கிழமை) நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கு எதிர்வரும் ஆறாம் மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், குறித்த வழக்கில் சந்தேகநபர்களாக ஜீவன் தொண்டமான் உட்பட 10 சந்தேக நபர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அவர்களை தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணையில் செல்ல அனுமதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வழக்கில் ஜீவன் தொண்டமான் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பெருமாள் ராஜதுரை மற்றும் சான் குலத்துங்க ஆகியோர் ஆஜராகினர்.

அதேநேரம் களனிவெளி பெருந்தோட்ட யாக்கத்திற்கு சார்பாக சட்டத்தரணிகளான பாலித்த சுபசிங்க மற்றும் சுரேஷ் கயான் ஆகியோர் பிரசன்னமாகினர்.

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17,மார்ட்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ .ஜெபரட்ணம் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதிவழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு ' வெள்ளியில் ஞாயிறு' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

"வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றதுதற்போது ஏழு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய கட்டடத்தில் கிரகப் பிரவேசம்

(கேதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரனின் நிதியொதுக்கீட்டில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திற்கு





கிரகப் பிரவேசம் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐஎம்.பாரிஸ், பிரதி அதிபர் இளங்கோ, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் விஜயகுமார், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# அரியாலையில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் பற்றிய விசாரணைகளுக்கு அரசு முழு ஒத்துழைப்புத் தரும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

யாழ். அரியாலை சித்துப் பாத்தி மயானத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக நீதிமன்றம் தலையிட்டுள்ள நிலையில் அரசாங்கம் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

சித்துப் பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசாங்கம் நீதியான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்து தொடர்பில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மயானத்தில் தகனமேடை அமைப்பதற்காக குழி தோண்டப்பட்ட போது மனித எச்சங்கள் வெளிவந்தன. குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்திய நிலையில் குறித்த இடத்தை நீதிபதி மற்றும் சட்ட வைத்திய அதிகாரி சென்று பார்வையிட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாள்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீதிபதி கலந்துரையாடி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய உள்ளதாக அறிந்தேன்.

ஆகவே கடந்த காலங்களைப் போன்று நீதிமன்ற விவகாரத்தில் நாங்கள் தலையிடப் போவதில்லை. அரசாங்கம் என்ற வகையில் நீதித்துறையின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். - என்றார்.



# கண்காட்சி.

(சியாஜ்)

கற்பிட்டி ஆலங்குடா மரவஞ்சேனை ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் வடமேல் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் பங்களிப்புடன் ஒரு வருட சுய தொழில் பயிற்சி சான்றிதழ் வழங்கலும் பெண்களின் உற்பத்தி பொருள்கள் விற்பனை கண்காட்சியும் ஆலங்குடா மரவஞ்சேனையில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஜீ எஸ்.ஏ அபே றுவான் தலைமையில் இடம்பெற்றது.

ஆலங்குடா மரவஞ்சேனை ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஒரு வருட காலமாக இடம்பெற்ற தையல், கேக் , பாபீஸ், நுளம்பு வலை , மலர் அலங்காரம் என 18 வகையான பயிற்சி நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன் பெண்களின் உற்பத்தி பொருட் கண்காட்சியும் இடம்பெற்றது

இந்நிகழ்விற்கு அமைப்பின் தலைவர் எம்.எஸ் றமீஸின் அழைப்பின் பெயரில் வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி காரியாலய அதிகாரிகள், புத்தளம் மாவட்ட காரியாலய அதிகாரிகள் , கற்பிட்டி பிரதேச செயலக காரியாலய உத்தியோகத்தர்கள் , வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் கற்பிட்டி பிராந்திய திட்ட முகாமையாளர் சுபுன், செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ், மற்றும் பயிற்சி ஆசிரியர் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் கேரள கஞ்சா பொதிகளுடன் ஒருவர் கைது

மன்னார்-சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாசீம் சிற்றி பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை மாலை கேரள கஞ்சா பொதிகளுடன் சந்தேக நபர் ஒருவர் மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா 31 கிலோ 62 கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ். சந்திரபால வின் பணிப்பில்,உதவி பொலிஸ் அத்தியட்சகர் போதி பக்ஸ என்பவரின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி பொ.ப .மதுரங்க,பொ.சா.74927 குணசிங்க தலைமையிலான





அணியினரே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சவரிபுரம்,சிலாவத்துறை பகுதியை சேர்ந்த 47 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அனலைதீவு கடற்பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்.அனலைதீவு கடற்பகுதியில் வைத்து 211 கிலோ 300 கிராம் எடையுடைய கேரளக்கஞ்சாவுடன் நேற்று (திங்கட்கிழமை) இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கேரளக் கஞ்சாவை எடுத்து வந்தவர்களிடம், கடற்பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கேரளக் கஞ்சாவைக்கைம்மாற்றும்போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2025இல் வெளியிடப்பெற்றது